தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் சரு	திருவள்ளுவர் யாண்டு உயயஉ விரோதிகிருது, ஐப்பசி (**1971** — அக்டோபர் — நவம்பர்)	மலர் எ

(சென்ற இதழின் தொடர்ச்சி)

நாடகக் கலை முன்னோடி

டாக்டர். சாலை இளந்திரையன் பி. எச். டி.
தில்லிப் பல்கலைக் கழகம்.

அப்போதே தேசீயம்

தமிழ் இலக்கியத்தில் தேசீயம் என்றால், 20-ம் நூற்றாண்டின் சுப்பிரமணியக் கவிஞரையே நாம் நினைத்துக் கொள்வது வழக்கம். சிறிது ஊன்றிக் கவனித்தவர்கள், 1891-ல் எழுதப்பட்ட மனோன்மணீயத்திலேயே அந்த உணர்ச்சி முகம் காட்டியுள்ளது என்பார்கள், இன்னும் பின்னோக்கிச் சென்று, பிரதாப முதலியார் சரித்திரத்தில் (1876) தெளிக்கப்பட்டுள்ள மொழித் தேசீயக் கருத்துக்களைச் சுட்டிக் காட்டுவோரும் உண்டு.

சுதந்திரத்தைப் பற்றிய பாடல்களாகவும் குறிப்புக்களாகவும் உள்ள இந்த எழுத்துக்களையே 'தமிழ் இலக்கியத்தில் சுதந்திர வேட்கையின் தொடக்கம்' என்று நாம் எண்ணி வருகிறோம். நாட்டுப் பற்றை விளக்கும் சுதேசமித்திரர் என்னும் ஒரு பாத்திரமே 1877ல் தமிழ்நாடக இலக்கியத்தில் படைக்கப்பட்டிருந்தது என்னும் செய்தி நம்மில் பலருக்குத் தெரியாது அந்தப் பாத்திரமும் நற்போக்கு உடைய கதாநாயகனின் நண்பனாக படைக்கப்பட்டுள்ளது கதாநாயகனே அந்தப் பாத்திரத்தின் நோக்கையும் நடவடிக்கைகளையும் பாராட்டுகிறான். அதாவது, நாட்டுப்பற்றை ஏற்று ஊக்குபவனே சிறந்தவன் என்னும் கருத்து நாடகத்தில் ஊட்டப்படுகிறது. இந்தியத் தேசீயச் காங்கிரசு என்னும் உரிமை இயக்கம் (1885ல்) முதல்முதலாகத் தோன்று

வதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பே, இந்த விதமான தேசீய உணர்ச்சி தமிழ் இலக்கியத்தில் வேர்க் கொண்டிருக்கிறது என்பதும் கவனிக்கத்தக்கது.

சுதந்திரத்தை ஒரு பெண்ணாக உருவகித்து, "நானொரு பெண்ணை நாடி நயமுடன் அவள் மேற் காதல், மானவர் எண்ணொணாத மட்டுமே வைத்துவிட்டேன்; ஊனமாம் உலகில் தேர்ந்த உடல் பொருள் ஆவி மூன்றும் ஆனதோர் அவள் பணிக்கே அற்பிதம் செய்துவிட்டேன்" என்பது சுதேசமித்திரர் கூற்றாக வருகிறது. [32] தொடர்ந்து இப்பாத்திரம், ஒரு நீண்ட (58 அடிகள் கொண்ட) அகவல் பாவால் இந்திய நாட்டைப் பாராட்டுவதும், நாட்டுப் பற்றில்லாதவர்களை விலங்குகளுக்கு ஒப்பிட்டு இடித்துரைப்பதும் கேட்கையில் நம் உடம்பே சிலிர்க்கிறது!

சில குறைகள்

பல சிறப்புக்கள் உடைய இந்த நாடகத்தில் குற்றங் குறைகளும் இல்லாமலில்லை. இரண்டாம் அங்கம் முதலாம் களத்தில் விசுவாசகாதகன் (வில்லன்) அறிமுகமாகிறான். அவனுடைய பேச்சு, நடை ஆகியவற்றாலும் அவன் மனைவி அவனிடம் நடந்துகொள்ளும் முறையாலும் அவனுடைய பாத்திரம் மிக அருமையாக அறிமுகமாகிறது. ஆனால், 30 வரிகளைக்கொண்ட அகவற்பாவில் உலகத்தில் (அக்கால இந்தியாவில்) பெண்களுக்கு இருந்துவந்த துன்பங்களை எல்லாம் வருணித்துவிட்டு, "அந்தப் போராட்டமெல்லாம் நமக்கு இல்லை" என்கிறாள் அவள்! இவளுக்கு இல்லாத குறைகளைப் பற்றி, இவள் தன் கணவனிடம், அதிகோபமாக, இவ்வளவு நீளமாக விவரிப்பானேன்?

பிரதாபசந்திரனின் தந்தையாகிய லட்சுமீவிலாசர் இந்தியா முழுவதும் யாத்திரை செய்து திரும்பியிருக்கிறார். இவரை அங்கம் 9, களம் 1-ல் சந்திக்கிறோம். மகனை அழைத்துவரச் சொல்லி ஜவானை அனுப்பிவிட்டு, மனைவியிடம், தாம் பலகாலமாக யாத்திரை செய்துவந்த இடங்களைப் பற்றி எல்லாம் (சுமார் அறுபது அடிகள் கொண்ட, நீண்ட கீர்த்தனையாகப் பாடத்தொடங்கிவிடுகிறார். பிரதாபன் வரும்வரை இவர்கள் இருவரும் மேடையில் சும்மா நின்றுகொண்டிருக்க முடியாது.

32 பிரதாபசந்திர விலாசம், அங்கம் 1. களம் 1.

அந்தவகையில், இடைநேரத்தில் ஏதாவது நடைபெற வேண்டும் என்னும் மேடை உத்திக்கு இந்த நிகழ்ச்சி பொருத்தமே, ஆனால், நாடகக்கதையின் வளர்ச்சிக்கு (இந்தியாவின் சுமார் இருபது பெரிய நகரங்களையும் பகுதிகளையும் பற்றிய) இந்த விரிவான வருணனை எந்த வகையிலும் உதவவில்லை.

பதினோராம் அங்கத்தின் முதற்களம் பிரதாபசந்திரனுடைய ஜமீனில் உள்ள ஒரு காட்டில் நடைபெறுகிறது. பிரதாபசந்திரனும் அவன் நண்பர்களும் வேட்டைக்கு ஆயத்தமாகும் காட்சி இது. இதிலே, பிரதாபசந்திரனுக்கும் அவனுடைய காட்டுப் பங்களாவின் காவல்காரனுக்கும் இடையில்நடைபெறும் உரையாடலில் வகைவகையான நாய்கள், குதிரைகள் மற்றும் வேட்டைக்குத் தேவையான கருவிகளின் பெயர்ப்பட்டியல் தரப்படுகிறது. வேட்டை நாய்களையும் குதிரை முதலியவற்றையும் மேடையில் காட்ட முடியாதாகையால், அவைகளை உரையாடல் மூலம் அறிமுகம் செய்தது பொருத்தமே. ஆனால், இந்த உரையாடல் பிரதாபசந்திரனுக்கும் ஜவானுக்கும் இடையே நடப்பது பொருத்தமாக இல்லை; இதுவரை மிக நல்ல பண்பாளனாகச் சித்திரிக்கப் பட்டு வந்த பிரதாபன் இங்கே, ஆடம்பர ஆர்ப்பாட்டப் பிரியனாகக் காட்சியளிக்கிறான். பிரதாபனின் செல்வச் செழிப்பை விளக்கும் இந்த உரையாடல் வேறு இரண்டுபேருக்கு இடையில் நடப்பதாக அமைக்கப்பட்டிருக்கவேண்டும்.

பன்னிரண்டாம் அங்கம் மூன்றாம் களத்தில் (நாடக இறுதிக் காட்சிக்கு முந்திய காட்சியில்) பிரதாபசந்திரனின் நண்பர்கள் குழந்தைமணம், பெண்ணடிமைத்தனம் முதலிய சமுதாயச் சீர்கேடுகள் பற்றி அலசுகிறார்கள். படித்த உயர் நடுத்தரவகுப்பை மனத்திற்கொண்டே இந்த நாடகம் அமைக்கப்பட்டிருந்தாலும் நாடகத்தின் அடிப்படைக் கருத்துக்கு இந்த உரையாடல் எந்த வகையிலும் உதவவில்லை. எனவே, இப்பகுதி, நாடகத்தோடு ஒட்டாமல் தனித்து நிற்கிறது.

குறையோ, நிறையோ?

நாட்டுத் தொண்டில் ஈடுபடப் போவதாகக் கூறும் சுதேசமித்திரர், (அங்கம் 1, களம். 1) இங்கிலாந்து நாட்டில் அரசுக்கு எதிராகக் கிளர்ந்த ஆம்டென் என்பவரைப் போலவும் மக்கள் நலனில் பேரார்வம் காட்டிய மனிதாபிமானியாகிய ஓவர்டு என்பவரைப் போலவும் செயல்புரியப் போவதாகக்

கூறுகிறார். விசுவாசகாதகனின் சூழ்ச்சியால் வேசி சோக் சுந்தரத்தின் மய்யலில் சிக்கிவிட்ட பிரதாபசந்திரன், (அங்கம்5 களம் 1) அவளை,

ரோமியோ மனங்கவர்ந்த
சூபமார் ஜூலியட்டோ?
நேமமார் பீட்ரார்க் குக்கே
நேர்ந்தநல் லாரா மாதோ?
காமியாம் மஜ்னுன் காதற்
கன்னியாம் லீலா வென்னோ?
பாமரன் சீலிம் பற்றும்
பரோலி நூர்ஜீ ஹானோ?

என்று வியந்து வருணிக்கிறான். விசுவாசகாதகனும் அவன் நண்பனும் பாடும் ஆங்கிலச் சொற்கள் கலந்த நகைச்சுவைபாடல்களை முன்பே பார்த்தோம்.

மேற்குறித்த (மேல்நாட்டு) வரலாற்றுப் பாத்திரங்களை பலர் அறியமாட்டார்கள்: பிரதாபனின் வருணனைப் பாட்டில் வரும் காதல் இணைகளின் பெயர்களைப் பலர் கேட்டே இருக்கமாட்டார்கள். தமிழோடு ஆங்கிலத்தைக் கலக்கும் நகைச்சுவையும், ஓரளவாயினும் இரண்டு மொழிகளும் தெரியாதவர்களுக்கு விளங்காது. ஆனால், பிரதாபசந்திர விலாசம் ஒரு குறிப்பிட்ட படித்தரத்தைச்சேர்ந்த (படித்த நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த) மக்களுக்காக மட்டுமே எழுதப்பட்டது என்பதையும் அவர்கள் அனைவரும் நாடகத்தில் வருகிற ஆங்கிலச் சொற்களையும் ஆட்களையும் அறிந்தவர்களே என்பதையும் நம்நினைவில் கொள்ளவேண்டும். அவர்களிடையே ஊடுருவிக் கிடந்த குறையை எடுத்துக்காட்டவே இந்த நாடகம் எழுந்தது. "ஒரு நாடக ஆசிரியரும் அவருடைய நாடகத்தைப் பார்க்கக்கூடியவர்களும் சமுதாயத்தின் ஏதாவது ஒரு படித்தரத்தினரையே பிரதிபலிப்பவர்களாக இருக்கலாம்; நாடகத்தில் எடுத்து விளக்கப்படும் நோக்கும் கருத்துக்களும்,— (சமுதாயம் முழுவதையும் பிரதிபலிக்காமல்),— அந்தச்சிலரையே பிரதிபலிப்பதாகவும் இருக்கலாம். ஆனால், நாடகத்தைப் பொறுத்தவரையில், அந்தச் சிலரே முக்கியம்: அவர்களே, நாடகம் எப்படி அமைய வேண்டும் என்பதை நிர்ணயிக்கிறார்கள்[33] இதுவே, அண்மை

33. C L. Barber: The Idea of Humour in the English Drama 1591—1700 Goteborg (1957), P. 28

கால நாடக ஆராய்ச்சியாளர்களின் கருத்து. ஆதலால், இவற்றைப் பெருங் குறைகளாகச் சுட்டிக்காட்ட முடியாது.

பெயர்கொண்ட பாத்திரங்கள் 26 பேரும், பெயர் சூட்டப் படாத வேலைக்காரர், வேடர், வயித்தியர் முதலான சில பாத் திரங்களும் இந்த நாடகத்தில் வருகிறார்கள். அவர்கள் மூலமாக அக்காலச் சமுதாயத்தின் குறைபாடுகள் பலவும் மேடைக்கு வருகின்றன. அக்கால "இலக்கியமரபு"ப்படி ஓர் அப்பாவியான தமிழ்ப்புலவரும், மருந்து மாந்தரீகம், சாமிக்கு நேர்த்தி என்னும் பலமுறைகளையும் ஒரே நோயாளியின்பேரில் கையாளும் நாட்டு வயித்தியரும் வருகிறார்கள்,

கதைக்கு நேரடியாகத் தொடர்பில்லாத இத்தனைபேரும், இத்தனை சிக்கல்களும் இந்த நாடகத்தில் வரவேண்டுமா? என்ற கேள்வி நியாயமானதே- ஆனால் எந்தத்துறையின் முன்னோடி யும் இந்தத் தவற்றைச் செய்தே இருக்கிறார் என்பதை நாம் உணரவேண்டும். சங்கமருவிய காலத்து இளங்கோவடிகள் முதல் 1876-ல் முதல் தமிழ் நாவலை வெளியிட்ட வேதநாயகர் வரை ஒவ்வொருவரும் இப்படியே எல்லாவற்றையும் ஒருபடைப் பிலேயே கொட்டியிருக்கிறார்கள் எனவே, அதிக ஆர்வம் காரணமாக ஏற்பட்ட இதை "வழுவமைதி" யாகவே கொள்ள வேண்டும்.

6

'நாடகத்தாத்தா' என்று போற்றப்பட்ட பம்மல் சம்பந்த முதலியார் 1885 வாக்கில் சுகுணவிலாச நாடகசபையை உரு வாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டார். அப்போது, தமது முயற் சிக்கு ஆதரவு தரக்கூடியவர்களாகக் கருதி அவர் சந்தித்தவர் களில் முதல்வரும் முக்கியமானவரும் இராமசாமி ராசுவே. இச் சந்திப்பைப் பற்றித் தமது நாடகமேடை நினைவுகள் என்னும் நூலில் விரிவாக எழுதியுள்ளார் முதலியார். இச்சந்திப்பில் இராமசாமி ராசு நமது சம்பந்தரைக் கேட்ட கேள்விகளி லிருந்தே, அவர் நாடகக்கலையில் எவ்வளவு ஈடுபாடு கொண் டிருந்தார் என்பது விளங்குகிறது, ஓய்வுபெற்று வசதியாக வாழும் தம்மிடம் யாரோ உதவிகோரி வந்தார்கள் என்று, கேட்டதைக் கொடுத்து அனுப்ப அவர் முந்தவில்லை. வந்தவர் கள் நாடகக்கலை பற்றிப்பேசியதும், அதை வளர்க்க அவர் களுக்கு உள்ள தகுதி என்ன என்பதைக் கண்டறிந்தார்; தகுதி உடையவர்கள் என்று தெரிந்ததும், நாடகசபையில் தாமும்

உறுப்பினராகிக்கொண்டார். இச்சந்திப்பைப் பற்றி எழுதும் சம்பந்த முதலியார், ''இவர் சமஸ்கிருதத்திலும் தமிழிலும் வல்லவர். தமிழில் இதற்குச்சில வருஷங்களுக்கு முன்னமே பிரதாபசந்திர விலாசம் என்னும் நாடகத்தை எழுதி அச்சிட்டவர். ஆகவே எங்கள் சபையை இவர் ஆதரிக்கத் தக்கவர் என்று எண்ணி இவரிடம் சென்ருேம்'' என்று குறித்திருப்பதும் கவனிக்கத்தக்கது. [34]

'ஆங்கிலேய பாஷையிலுள்ள நாடகங்களின் தன்மைவாய்ந்ததாயும், நம்மவர் எல்லோரும் வாசித்தறியும்படி எளிய நடையாக வசனத்திலும்' எழுதப்பெற்றவை பம்மல் சம்பந்தமுதலியாரின் நாடகங்கள். [35] **19-ம் நூற்ருண்டில் தமிழ் உரைநடை** வளர்ச்சி என்னும் நூலை எழுதிய அ. மு. பரமசிவானந்தம், பம்மலின் நாடகங்களோடு ஒப்பவைத்து எண்ணத்தக்கதாகப் (பக்கம் 106) பிரதாப சந்திர விலாசத்தைக் கணித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. இருமொழிப்புலமையும், பலநாட்டுப்பயண அனுபவமும், பலதுறைப் பணிகளில் ஈடுபட்ட அனுபவத் தெளிவும் உடையவராக விளங்கிய இராமசாமி ராசு இத்தகைய தரமான புதுமை ஒன்றைத் தமிழில் செய்ததில் வியப்பு ஒன்றும் இல்லை

நாடக முன்னேடி

தமிழ் நாடகக்கலை வரலாற்றில் காசி விசுவநாத முதலியார், சங்கரதாசு சுவாமிகள், பம்மல் சம்மந்தமுதலியார், தெ பொ. கிருட்டினசாமிப் பாவலர், எம். கந்தசாமி முதலியார் போன்ற பல பெரியவர்களுக்குத் தனித்தனிச் சிறப்புக்கள் உண்டு. 19-ம் நூற்ருண்டின் தொடக்கத்திலேயே டம்பாச்சாரி விலாசம், தாசில்தார் நாடகம் போன்றவற்ருல் தமிழில் சமுக நாடகங்களுக்குத் தோற்றுவாய் செய்தவர் காசிவிசுவநாதர்; ஆனல். அவரும், நாடகத்தின் உரையாடல். காட்சிப்பிரிவு முதலான மற்ற அம்சங்களில் புதுமையைப் புகுத்தவில்லை நாடகஅமைப்பு அந்த அமைப்பிலே காணப்படும் நுணுக்கம், நாடகப்பாத்திரங்கள் வாயிலாக வெளியிடப்படும் கருத்து ஆகிய பலவற்றில் புதுமையைப் புகுத்தியவர் சங்கரதாசு சுவாமிகள். [36] ஆனலும். பிரதாபசந்திர விலாசம் (1877-ல்) வெளிவந்து பலகாலத்துக்குப்

---

34. நாடகமேடை நினைவுகள். பக்கம். 58-59
35. பம்மல் சம்பந்த முதலியார்: லீலாவதி சுலோசன.
சென்னை (1895) முன்னுரை.
36. நாடகக்கலை, பக்கம், பக்கம் 22

பிறகே சுவாமிகள் நாடகத்துறையில் ஈடுபட்டார்; 1902-ல்தான் நாடக ஆசிரியர் என்றபுகழ் சுவாமிக்குக் கிடைத்தது[37] இவரை விடவும் சிறந்தபணிகளை நாடகக்கலைக்குச் செய்துள்ள ‘நாடகத் தாத்தா’ பம்மல் சம்பந்த முதலியாரும் சுவாமிகளின் காலத்தைச் சேர்ந்தவரே. தெ. பொ. கிருட்டினசாமிப் பாவலர், பல சமுக நாடகங்களை நடத்தியவர்: முதன்முதலாகத் தேசீய எழுச்சி நாடகம் (“கதரின் வெற்றி”) நடத்தியவர் என்னும் பெருமையும் இவருக்கு உண்டு. ஆயினும் இவர். இராமசாமிராகவுக்குச் சுமார் 40 ஆண்டுகள் பிற்பட்டவர்; 1922-ல் தான் இவருடைய “கதரின் வெற்றி” முதன் முதலில் மேடை ஏற்றபட்டது. தொழில்முறை நாடகங்களைப் பயிற்றுவித்து நடத்துவதில் பெரும்புகழ் பெற்றவர் கந்தசாமியார்; இவரை ‘நாடக மறு மலர்ச்சித் தந்தை’ என்றே நாடக உலகம் அழைத்துவந்தது. ஆயினும், இவருடைய சாதனை வரலாறும் பிரதாபசந்திர விலா சத்துக்கு அய்ம்பது ஆண்டுகள் பிற்பட்டதே.

இந்தப் பின்னணிகளைக்கொண்டு கவனிக்கையில், சமுதாயச் சீர்திருத்தம். தேசீய உணர்ச்சி முதலியவற்றைத் துணைக் கருத் துக்களாக்கி, அன்றைய சமூகக் கேடு ஒன்றைச் சுட்டிக்குறித்து நாடகம் செய்த இராமசாமி ராகுவின் பெருமை விளங்குகிறது. அவர் செய்த பெரிய மாறுதல்கள் நாடகத் துறையில் பெரிதாக எடுத்துப் பேசப்படாவிட்டாலும், 1922-ம் ஆண்டிலே கூட இந்த நாடகம் பலமுறை நடிக்கப்பட்டுள்ளது.[38] நாடகத்தின் அடிப் படைக் கருத்து, படித்த உயர் நடுத்தர வகுப்பினரிடையே (ஒரு குறிப்பிட்ட காலத்தில்) மிகுதியாக இருந்த ஒரு தீய பழக்கத்தை இடித்துறைப்பதாக இருப்பதால். காலப்போக்கில் இந்த நாட கத்தின்பால் மக்களுக்குக் கவர்ச்சி குன்றியிருக்கலாம் என்று தோன்றுகிறது. ஆனல் ராகு கையாண்ட நாடக உத்திகள் பல வற்றையும் பின்வந்த நாடக ஆசிரியர்கள் பின்பற்றியே வளர்ந் துள்ளார்கள். எனவே, நாடக அமைப்பு, உரையாடல். கருத் துத்தேர்வு, பாத்திர அறிமுகம், பாத்திரப் படைப்பு என்னும் பல அம்சங்களிலும் புதிய தமிழ் நாடகத்துக்கு வழிகாட்டியாக இருந்த பிரதாபசந்திர விலாசத்தை எழுதிய இராமசாமிராகுவே புதிய தமிழ் நாடகத்துக்கு முன்னோடி என்பதில் அய்யமில்லை.

37 எம். என். எம். பாவலர்: தமிழ் மாகாண நாடகக்கலை அபிவிருத்தி மாநாட்டு மலர், ஈரோடு (1944), பக்கம் 27

38. நாடகக்கலை, பக்கம் 19

(சென்ற இதழின் தொடர்ச்சி)

திருக்குறட் கருவூலம்

நக்கீரன் வழியடிமை வித்துவான், பி. மா. சோமசுந்தர முதலியார்
இராணிப்பேட்டை.

இனி ஒரு சாரார், பரிமேலழகர் தம் விசேடவுரையில் "ஆதி பகவன் முதற்றே" என உலகின்மேல் வைத்துக் கூறினார்" என வருவது பிழைபட்ட பாடம். 'ஆதி பகவன் முதற்றே யுலகு' என உலகின் மேல்வைத்துக் கூறினார் என்பதே சரியான பாடம் என்பர். சில ஏடுகள் முற்குறித்த பாடத்தையும் சில ஏடுகள் பிற்குறித்த பாடத்தையுங் கொண்டுள்ளன. இவ்வேறுபாடும் அண்மைக் காலத்ததன்று என்பது சபாபதி நாவலர் முற்குறித்த பாடத்தையே கொண்டிருத்தலால் புலனும் ஏடு பெயர்த்தெழுதுவோர் சோர்வினல் 'உலகு' என்ற சொல்லை எழுதாது விட்டிருக்கலாம்; அல்லது திருக்குறளில் வரும் இரண்டாமடி முழுதும் நினைவுபெற்று 'உலகு' என்ற சொல்லைச் சேர்த்தும் எழுதியிருக்கலாம். இவ்விரண்டில் உண்மையாதெனல் தெளிவாகவில்லை. உலகு என்று சேர்க்காத "ஆதி பகவன் முதற்றே" என்ற பாடத்தினல் பொருள் கேடுறவில்லையாகலின் இப்பாடபேதத்தால் நேரும் இழப்பொன்றுமில்லையென்க. இனி, திருப்பனந்தாள் மடம் வெளியிட்ட, திருக்குறள் உரைக்கொத்து (1960-ஆம் ஆண்டுப் பதிப்பில் முதற்பாடமும், திருக்குறள் பரிமேலழகருரை (1968ஆம் ஆண்டு)ப் பதிப்பில் இரண்டாம் பாடமும் இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இனி, 'அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலானும் ஆதி பகவற்குத் தலைமை செயற்கையுணர்வானன்றி இயற்கையுணர்வான் முற்றுமுணர்தலானுங்கொள்க' என்ற தன் கருத்தைத் தமது 'சூடாரம்' என்னும் நூலில் வி. இராமாநுச கவிராயர் கீழ்க்கண்டவாறு விளக்குவார்.

"ஒலிவிகா ரத்தின லுதித்தன எழுத்தெலாம்.
அவ்வொலி முயற்சிநான் கண்ணநாப் பல்லிதழ்
வவ்விய அவற்றுழை மன்னும் மூவகை
முயற்சிக்கும் அங்கா முயற்சிகா ரணமாம்

அதனுற் பிறப்பதொன் ருக லானும்
ஏனைய வேனை முயற்சியிற் பிறப்பினும்
அங்காத்தல் வேண்டிற் ருத லானுமவ்
வொலிவிகா ரத்தெழுத் தொன்ருெழி நானூற்
றினுமிது சிறத்தலி னியன்முறை நிறுப்போர்
சிறப்பினு மினத்தினுஞ் செறிந்தீண் டம்முதல்
நடத்தல் தானே முறையா கும்மே.

''எனக்கூறி, முன்னரகரத்தை வைத்து முறை செயலால் எழுத்தெல்லா மகரமுதல வெனல் பொருந்திற்றெனக் காண்க.

''நாத மாத்திரை யகார வடிவிற்
விரவியுந் தனித்து மெனவரு மிரண்டிடம்.

''இனி இறைவன் விராட்டுட னிரணிய கருப்பன்
அந்தரி யாமி கூடத்தரென் விகாரியாய்
எல்லா வுலகிற்கும் வல்ல காரணனுய்
முயற்சி வகையின் முன்னின்றவை முழுவதூஉம்
உணர்த லானும் புணர்வி காரமாஞ்
சுபாவ சைதந்ய மாத்திரமா யபாவமாய்
நனிதுன்று பிரமமெனத் தனிநின் றுலகெலாங்
காட்சியின் வைகுறூஉ மாட்சி யானும்
அடுத்துக் காட்டிய அகரம் இறைவற்
கெடுத்துக் காட்டணி யெனலும் உய்த்துணர்மின்''

இதன்கண் வரூஉம் பொருள்களிற் சில கடியற் பாலவெனினும் ஒரு சாரார் கருத்துணர்த்துவான் வருவித் துரைக்கப்பட்டது.

(ஈ) இனி, இறையுண்மையறிவுறுப்பான் புக்க நம் தெய்வப் புலவர் எத்துணையோ உவமைகளிருப்பவும், அவற்றை புறம் போக்கி அகரத்தை ஆண்டதென்னை கொலெனின், ஏனைய உவமைகள் பல்லாற்ருனும் இறையியல்புகளோ டொவ்வாது, ஒரு புடையேயொத்து நிற்பனவாகலானும் இறையியல்புகளைப் பல்லாற்ருனும் எடுத்துக் காட்டி முற்றுவமையாதலானு மாண் டனரென்க.

அற்றே லஃதங்ஙனமாக, வாலறிவனுய இறைவன் எல்லா மாய் அல்லதுமாயிருப்பவனன்றே. அவனைத் தனக்கெனவொரு ஞானமில்லாப் பாசப் பொருளோடுவமித்தல் சால்பிற்ருே வெனில் ஈண்டுவமித்தது பொது வியல்பு பற்றியே யல்லால் சிறப்பியல்பு பற்றியன்ருகலின் அது கூடாவன்றென்க. அன்றி

யும் "அறிவிக்கவன்றி அறியாவுளங்கள்" ஆதலினுல் நம்மனோர்க்கொரு சிறுவரையுணர்த்துவானுவமித்தார் என்று முரைக்கலாம். இஃதே கருத்தென்பது "திருவருட் பயன்" என்னும் நூலில், உமாபதி சிவாசாரியார்,

"அகர வுயிர்போ லறிவாகி யெங்கு
நிகரிலிறை நிற்கு நிறைந்து"

என்று அகரத்துக்குரித்தாகாத "அறிவாகி யெங்கு நிகரில்" என்பதனை இறைவற்கு அடையாகப் புணர்த்துரைத் தருளினமையாலுணரப்படும். அகரத்தோடு ஒப்பித்தருளினும் இறை நிகரிலான் என்றிதனுலுணர்த்தப்பட்டது. இதன் விரிவுரையினை 'உ' பகுதி (iv) இல் காண்க.

(உ) இக்குறட்பொருளை விரிக்கும் ஏனைய உரைகளையுங் காண்பாம். (i) "வேதத்துள் 'ஏகம்' என்ற சொல் வேறு பொருள்படாதென்பார் "ஒன்றென்றதொன்றே" என்றும், அதற்குத் தாற்பரியங் கூறுவார் "விண்ணு மண்ணுந் தோற்றுவிக்குந் தேவன் ஒருவனே" என்றும் "ஒருவனே யுருத்திரன், இரண்டாம் முதற் கடவுளில்லை" என்றும், "பிரமப் பொருளொன்றே என்றும் ஓதுகின்ற அச்சுருதிப் பொருளே பற்றி 'ஒன்றே பதி' என்றும், பதியோடு உயிர்களிடை வேற்றுமை கூறுவார் "பசுவாமொன்றென்ற நீ" என்றும். பசுவாதற்குக் காரணங் கூறுவார் "பாசத்தோடுளேகாண்" என்றும், பிரமப் பொருளில்லையாயின் ஒரு பொருளுமில்லை என்பதோர் சுருதிப்பொருளிதனேடு முரணுமை அதன் தாற்பரியம் உணர்த்துமுகத்தான், அங்ஙனம் வேருயினும் வேறன்மைக்கு அநுபவங் காட்டுவார் "ஒன்றின்ருல் அக்கரங்களின்ரும் அகர வுயிரின்றேல் இக்கிரமத் தென்னுமிருக்கு" என்றுங் கூறினர்.

"மெய்கள் அகரமொடு சிவணியன்றி யியங்காமையானும், இகர ஈகார உகர ஊகாரங்கள் அகரத்திற்குரிய அங்காப்பு முயற்சியொடு சிவணியன்றிப் பிறவாமையானும், ஏகார ஓகார முதலாயின முன் அகரக் கூறும் பின் இகர உகரக் கூறுகளுமா யியைந்தன்றிப் பிறவாமையானும், அவையெல்லாம் அகரமாகிய வுயிரையின்றி யமையாமை பெற்ரும். அது போலப் பிரமமில்லையாயின் ஒரு பொருளுமில்லை என்றதூஉம் பிரமத்தையின்றி யமையாமைப் பொருட்டென்பார் 'அக்கரங்களின்ரும் அகரவுயிரின்றேல் இக்கிரமத் தென்னுமிருக்கு" என்ரூர். அகரவுயிர் நாதமென்றுரைப்பாருமுளர்" (சிவஞானமாபாடியம்)

மாதவச் சிவஞான முனிவரின் இவ்வுரை பெரிதும் போற்றிக் கோடற்பாற்று.

(ii) "அகர முதல என்புழி அகரம் தனியுயிருமாய்க் ககரவொற்று முதலியவற்றிற்கு உயிருமாய் வேறு நிற்றலின், மெய்யினிற்கும் உயிரும், தனியே நிற்கும் உயிரும் வேறு எனவுணர்க. அவ்வகரந்தனியே நிற்றலானும் பல மெய்க்கண் நின்று அவ்வம் மெய்கட்கிசைந்த ஓசைகளைப் பயந்தே நிற்றலானும் வேறுபட்டதாகலின், ஒன்றேயாயும் பலவேயாயும் நிற்பதொரு தன்மையுடைத்தென்று கோடும், இறைவன் ஒன்றேயாய் நிற்குந் தன்மையும் பல்லுயிர்க்குந் தானே யாய் அவற்றினளவாய் நிற்குந் தன்மையும் போல"

(தொல். எழுத்து 8, நச்சினார்க்கினியருரை)

"மெய்க்கண் அகரங் கலந்து நிற்குமாறு கூறினாற்போலப் பதினோருயிர்க்கண்ணும் அகரங் கலந்து நிற்குமென்பது ஆசிரியர் கூறாராயினார். "அந்நிலைமை தமக்கே புலப்படுதலானும் பிறர்க்கு இவ்வாறு உணர்த்துதலரிதாகலானுமென றுணர்க. இறைவன் இயங்குதிணைக் கண்ணும் நிலைத்திணைக் கண்ணும் பிறவற்றின் கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்ப முடிந்தாற்போல, அகரமும், உயிர்க்கண்ணும் தனி மெய்க் கண்ணுங் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்குமெனபது சான்றோர்க்கெல்லாம் ஒப்ப முடிந்தது. 'அகர முதல' என்னுங் குறளான அகரமாகிய முதலையுடைய எழுத்துக்களெல்லாம்; அதுபோல இறைவனாகிய முதலையுடைத்து உலகம்' என வள்ளுவனார் உவமை கூறியவாற்றானும். கண்ணன் எழுத்துக்களில் அகரமாகின்றேன் யானே' எனக் கூறியவாற்றானும். பிற நூல்களானுமுணர்க"

(தொல். எழுத்து 46 — நச்சினார்க்கினியருரை)

(iii) "வேதத்துள் ஆன்மா ஏகனே யென்பதற்குப் பரமான்மா வொருவனே யென்பதுதாற்பரிய மாகலான். அதுபற்றி முரணுதலின்மையான், மேலைச் செய்யுளின் வேறாயென்றதூஉம், ஒன்றாகிய அகரம் பலவெழுத்துக்களில் விரவி நிற்றல் யாங்ஙனமென்னும் ஆசங்கைக்கு இடமின்மையான், உடனுமாயென்றதூஉம் அமைவுடையன வென்பதாம்"

(சிவஞான சித்தியார் இரண்டாம் சூத்திரம் முதலதிகரணம் 2-ஆம் செய்யுள் பொழிப்புரை)

(iv) அகரம் தானே தனித்தும் ஏனையுயிருடம்புகளெல்லாம் வேறின்றிப் புணர்ந்தும் நிற்றலானும், அங்ஙனம் புணர்ந்த வழியும் தன்னுருவு தோன்றுதலானும், முதற்கண் வைக்கப் படுதலானும், விகாரமின்றி நாதமாத்திரையா யியல்பாற் பிறத் தலானும் இறைவற்குவமையாயிற்று. இவ்வொப்புமையாற் சட மாகிய வொலிவடிவன்றென்பதற்கு அறிவாகி யென்றும், அகரம் போல வொருகாற் புணர்ந்து நீங்காதென்பதற்கு நிறைந்தென் றும், அவ்வகர முதலிய வெழுத்துக்களுமுட்படுதற்கு எங்கு மென்றும், மாணுக்கற் கறிவித்தற் பொருட்டு உவமனொடு புணர்த்தினும் அன்னது அன்று என்பதற்கு நிகரி லென்றுங் கூறியருளினர்.

(திருவருட் பயன் — நிரம்ப வழகிய தேசிகர் உரை)

(v) திருக்குறளுரையாசிரியன்மார் தம்மில் மணக்குடவருரை பொழிப்புரையாயே அமைந்தது; உவமையினை யியைபுகாட்டி யுணர்த்திற்றில்லை. பரிதியாரோ உயிரெழுத்துப் பன்னிரண் டுக்கும் அகரம் முதலெழுத்து என்று உரை காண்கின்றுர். இவர் மெய்களைப் புறம்போக்கிய திறமுணரக் கூடவில்லை காலிங்கரோ அகரத்தான் விரிந்தன எழுத்துக்களும் கலைகளும்; ஆதிபகவனல் விரிந்தன உலகமும் உயிருமென்ற கருத்தையே தெரிவிக்கின்றுர் இவரனைவோருங் காணத்தவறிய அகரவுவ மையின் நுண்பொருளைப் பரிமேலழக ரொருவரே காண்கின்று ரென்பது நினைவிருத்தற்பாலது.

அ. பிறநூல்கள்

இக்குறளின் மாட்சியினையோர்ந்தே, பல புலவன்மாரும், அருணலஞ்சான்ற முனிவர்களும், இறையுண்மையை யுணர்த்து வான் இதனை யெடுத்தாள்வாராயினர். சான்றுகச் சில ஆசிரி யன்மார் அருளிச் செயல்களைக் காண்பாம்:

(அ) "அகர முதலி னெழுத்தாகி நின்று
யடியே னுய்யப் போவதோர் சூழல் சொல்லே"
(சுந்தரர் — திருநெல்வாயிலரத்துறை)

(ஆ) "ஆரு மறியா ரகார மவனென்று"
(திருமந்திரம் 1751)

(இ) "அகரவுயி ரெழுத்தனைத்து மாகி வேறு
யமர்ந்ததென வகிலாண்ட மனைத்து மாகி
(தாயுமானவர்.)

(ஈ) "அக்கரங்க ளின்ரு மகர வுயிரின்றேல்"
(சிவஞானபோத வெண்பா)

(உ) "அக்கரங்க டோறுஞ்,
சென்றிடு மகரம்போல நின்றனன் சிவனுஞ்
சேர்ந்தே"
(சிவஞான சித்தியார்)

(ஊ) "அகர வுயிர்போ லறிவாகி யெங்கு
நிகரிலிறை நிற்கு நிறைந்து."
(திருவருட்பயன்)

(எ) "அக்கரங்கட் கெல்லா மகரவுயிர் நின்ருற்போன்
மிக்க வுயிர்க்குயிராய் மேவினேம்"
(உண்மை விளக்கம்)

அகரவுயிர் பன்னீருயிரும் பதினெண் மெய்யுமாகிய எழுத்துக்களிலெல்லாம் விரவி நிற்றலே உடலாலிருவர் உயிராலொருவரெனத் திகழுங் காதலர்கட் கொப்பாக்கி, கச்சியப்ப முனிவர்,

"பன்னீருயிரும் பதினெண் ணுடலும் பயின்றியக்கும்
அந்நீ ரெனவடல் வேலோன் றனக்கு மமிழ்துயிர்க்கும்
முந்நீர்த் தரள முறுவன் முரிபுரு வத்திவட்கு
நன்னீ ருயிரொன்று மெய்யிரண் டாகி நயந்ததுவே"

என்றுரைத்து மகிழ்வர். பிற்றைநாட் பேராசிரியன்மார் சிலர் திருக்குறளின் ஓரோ ரதிகாரப் பொருட்கு ஓரொரு கதையைச் சான்ருக நிறுத்தி, இறுதியில் அப்பொருணுவலுங் குறட்பாவை வைத்து வேற்றுப் பொருள் வைப்பணியிலங்க நூல்களையாத்தனர். சோமேசர் முதுமொழி வெண்பா மூருகேசர் வெண்பா. சிவ்சிவ வெண்பா. இரங்கேச வெண்பா, திருப்புல்லாணிமாலை, வடமலை வெண்பா முதலிய அவ்வாறு யாக்கப்பட்டன. அவற்றுள் ஓரிரண்டையேனும் ஈண்டு நோக்குவாம்

(அ) 'சீர்கொளிறை யொன்றுண்டத் தெய்வநீ யென்றெப்பாற்
சோர்விலடை யாற்றெளிந்தோஞ் சோமேசா — வோரில்
அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."
(சோமேசர் முதுமொழி வெண்பா)

(ஆ) "மூதுரை வள்ளு வரக ரமுத லவெழுத்தெல்லா
மாதி பகவன் முதற்றே யுலகென லாயமைத்த

நீதி யுனையன்றி நீணில முய்ய நெறிமற்றுண்டோ
மாதவ புல்லைத் தலத்துமென் னெஞ்சத்தும்
வாழ்பவனே"

(திருப்புல்லாணி மாலை)

௬. உவமையின் நுண் பொருள்

(அ) அகரம், தனக்கு மூலமாக எவ்வெழுத்தையுங் கொள்ளாது, தான் ஏனை யெழுத்துக்கட்கு மூலமாதலொப்ப, இறைவனும், தனக்கு மூலமென வொன்றின்றி, ஏனையுலகுயிர்கட்குத் தான் மூலமாய் நிற்பன் இஃது இறைவனின் எண்குணங்களுள் தன்வயத்தனுதலைச் சுட்டும் அகரம் விகாரத்தானன்றி நாதமாத்திரையான் இயல்பாக வெளிப்பட்டு நிற்றலொப்ப இறைவனுந்திரிபின்றிப் பிரணவத் திருமேனி கொண்டு (பிறவாயாக்கைப் பெரியோனுக) விளங்குவன். இஃது தூய வுடம்பினனுதலைக் காட்டும். அகரம் நாதமாத்திரையான் இயல்பாக வெளிப்பட்டு நிற்றலொப்ப இறைவனும் இயற்கையுணர்வான் முற்று முணர்பவனுவன். இஃது இயற்கையுணர்வினனுதல், முற்றுமுணர்தல் ஆகியவற்றைச்சுட்டும்.

அகரம், கருதிய பொருள் பயப்பான் ஏனையெழுத்துக்களுள் நின்றும், புணர்ந்தும் நடாத்தியும் சொல்லாக்கம் ஆற்றலையொப்ப இறைவனும் உயிர்கட்குப் பேரின்பம் புணர்ப்பான் ஏனையுலகுயிர்களுள் நின்றும் நடாத்தியும் மோக்கம் பயத்தலால் பேரருளுடைமையைப் பேசும் அகரத்திற்கு விகாரமின்மையேய்ப்ப இறைவனும் விகாரமின்றி விளங்குதல் இயல்பாகவே பாசங்களினீங்குதலை யியம்பும். அகரம் ஏனையெழுத்துக்களாலியக்கப்படாது, ஏனையெழுத்துக்களை யியக்குதலொத்து இறைவனும் ஏனைய இயங்குதிணை, நிலைத்திணை, பிறபொருள்களானியக்கப்படாது. அப்பொருள்களைத் தானடாத்துதல் முடிவிலாற்றலுடைமையை மொழியும். அகரம் பிறவெழுத்துக்களைத் தோற்றுவித்தும், நடாப்பித்தும், பொருள் பயக்கும் பயனையவைகட்குண்டாக்குவித்து அதனுற்றனக்கொருபெரும் பயனெய்தாதே நிற்கும் ஆயினும் தன் வன்மையிற் சிறிதுங் குறையாதே பண்டு போற்றிகழும். இறைவனும் உலகைத் தோற்றுவித்தும், நடப்பித்தும் உயிர்கள் சிற்றின்பம் நுகரவும் வீட்டின்பம் நுகரவும் செய்தும், தனகொருபயன் எய்தாதே நிற்பன். வீட்டின்பம் சான்ரோர் பலராலென்றும் நுகரப்பட்டுளதாகவும் அதனல் சிறுமையுரது பண்டுபோற்றிகழ்தல் வரம்பிலின்பமுடைமையை வழுத்தும். இன்னணம் இறைவனது எண்குணங்களையும் 'அகர முதல வெழுத்தெல்லாம்' எனவருஉவமனுணர்த்திற்றென்க.

(ஆ) எழுத்துக்கள் உயிர், மெய்யென இருவகைத்தாய்த் தமக்கு அகரத்தை முதலாக உடையன. அகரத்தாலியக்கப் படுகின்றன. அதுபோல உலகமும் உணர்வுடைப் பொருள் உணர்விலாப் பொருள் என இரண்டாய் வாலறிவனைத் தமக்கு முதலாகக் கொண்டு அவனால் இயக்கப்படுகின்றன.

(இ) அகரம், உயிர், மெய்யெழுத்துக்களுடன் கலந்து நிற்பினும் தன்னை வெளிப்படக்காட்டாது. ஆயினும் அவ்வுயிர், மெய்களின் வேருகத் தனித்து நிற்குமாற்றலுடையது அகரமென்க.

இறைவனும் உலகுயிர்களுளொன்றி நிற்பினுந்தன்னை வெளிப்படக்காட்டான். அவ்வுலகுயிர்களின்றும் தனித்து நிற்பன் இறைவன் என்க

(ஈ) அகரம் ஏனைய உயிரெழுத்துக்களுள்ளும் மெய்களுள்ளும் விரவி நிற்றல் உய்த்துணர்வானறியப்படும் உயிர்மெய்களுள் கலத்திருத்தல் புணர்ச்சி விதியானறியப்படும்.

இறைவன் உயிர்களுள் விரவி நிற்றல் தன்னைத்தானறியத் தலைப்படுந் தலையுணர்விலைறியப்படும். ஏனையவற்றுள் விரவி நிற்றல் அளவை யிலக்கணத்தா லறியப்படும்.

(உ) அக்கரங்க ளின்ரும் அகர வுயிரின்றேல்.
அவனன்றி யோரணுவு மசையாது 'அணு ஈண்டுயிர்கள் மேல் நின்றது. உயிரல் பொருண்மேலன்று)

(ஊ) மெய்யினியக்கம் அகரமொடு சிவணும் அகரமே மெய்களுள் கலந்து நிற்கவல்லது. மெய்கள் அகரத்துள் தங்கா (உடம்புள் உயிரேறுமேயல்லாது உயிருள் உடம்பேருது. வண்டியின்மேல் நாம் ஏறுதல் வேண்டும். நம் மேல் வண்டி ஏறக்கூடாது)

உயிர்களைத் தனக்கு மெய்யாகக்கொண்டு (உடம்பாகக் கொண்டு) இறைவன் தங்குவான் (நமது உடப்புள் நமதுயிர் தங்கும். நமது உயிரே இறைவனுக்கு உடலாகும்.) உயிர்களுள் இறைவன் ஒன்றி நிற்பன். இறைவனுள் உயிர்கள் ஒன்றி நில்லா. இறைவன்பால் உயிர்கள் ஒன்றி நிற்பினும் இறைவன் தனித்தியங்கு மாற்றலுடையானென்க.

யாங்ஙனமோ வெனில் லகர மெய்மே லகர மூர்ந்தால் அது லகர உயிர் மெய்யாய் நிற்கும் லகர மெய் அகரத்தோடொன்றி நின்றால் 'அல்' எனும் இருள் குறித்தெழு மொழியாய்த் தோன் றுமே யல்லாது ஓரெழுத்து நீர்மைத்தாகாது. அது போல இறைவனை உயிர்கள் சார்ந்தால் பேரின்பமாகிய பயன் தோன் றுமேயன்றி இறைவனுள் சென்று தங்கி இயக்கும் வன்மையுறாது.

(எ) உயிர்மெய்யில் மெய்யின் வடிவந்தோன்றும். உயிரின் வடிவம் காட்சி தராது. அதுபோல இறைவன் உலகத்துள் நிறைந்திருப்பினும், உலகமும் அதனியக்கமும் காட்சியாமே யன்றி இறைவன் காட்சியாகான்.

(ஏ) அகரம் தடையின்றி ஒலி வடிவம் பெறும். ஏனை யெழுத்துக்களோ அவ்வாறின்றி, இதழ், நா, பல், மூக்கு, அண்ணம் முதலிய இடங்களில் தடையுண்டு தோன்றும்.

இறைவன் அவ்வாறே இயல்பாகப் பாசங்களினீங்கினவனு வான். ஏனையுயிர்களோ பாசத்தால் கட்டுறலால் தோன்றுவ.

(ஐ) உயிர்மெய்களில் அகரத்தைக் காண்டலியலாதேனும் அதனை மெய்யினின்றும் வேறு பிரித்தால் காணலியலும் சான் ருகக் ககர மெய்யை க் + அ என்று பிரித்துக் காண்க.

உலகுயிர்களுள் நின்ற இறைவனை அந்நிலையிற்காண்ட லியலாதேனும், காண்டல் கருதிய சான்றோர்கள் தங்களை உல கினின்றும் வேறு பிரித்துக்கொண்டு கண்டு களிப்பார்கள்.

(ஒ) அகரம் ஒலி வடிவில் ஒரு தன்மைத்தாயினும் வரி வடிவில் பன் மொழிகளிலும் வேறுபட்டு நிற்பது

இறைவன் சொரூப நிலையில் ஒரு நீர்மையனேயாயினும் தடத்த லக்கணத்தில் பல சமயங்களிலும் வேறுபட்டு நிற்பன்.

(ஓ) திருந்தா மொழிகள் அகரத்திற்கு வரிவடிவங் கொண் டிராதிருந்தாச் சமயங்கள் இறைவனுக்குத் தடத்தலக்கணத் தைத் கொண்டிரா

இத்துணை அரிய கருத்துக்களைத் தன்னகங் கொண்ட "அகர முதல" எனும் முதற் குறளின் மாண்பொருளை ஒரு வாறு கண்டோம்.

"கற்றதனு லாய பயனே" அடுத்த கட்டுரையில் காண்போமாக

நாட்டுப் பாடல்

பேராசிரியர் வ. பெருமாள்,
எம். ஏ பி டி., எம். ஆர். ஏ. எசு.,
தமிழ்ப் பேராசிரியர், முதல்நிலைக் கல்லூரி
உரிகம். கோலார் தங்கவயல்.

(முற்றொடர்ச்சி துணர் ௪௫—மலர் ௪)

பாமரமக்களுக்கும் மெய்யறிவைக் கொளுத்த வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்துடன் சித்தர்கள் பாடிய பாக்கள் மிகுதியாக உண்டு. அவை ஏட்டுடன் இருந்து விடாமல் மக்கள் விரும்பிப் பாடுகின்ற நாடோடிப் பாடல்களாகவே ஆகிவிட்டன.

நாதர்முடி மேலிருக்கும் நாகப்பாம்பே
நச்சுப்பையை வைத்திருக்கும் நல்ல பாம்பே
பாதலத்திற் குடிபுகும் பைங்கொள் பாம்பே
பாடிப்பாடி நின்று விளையாடு பாம்பே

என்னும் பாம்பாட்டி சித்தர் பாடலும்

மாங்காய்ப்பால் உண்டு மலைமேல் இருப்போர்க்குத்
தேங்காய்ப்பால் ஏதுக்கடி? — குதம்பாய்
தேங்காய்ப்பால் ஏதுக்கடி

என்னும் குதம்பைச் சித்தர் பாடலும் பாமர மக்களிடம் நன்கு பயிலப் படுகின்ற சித்தர் பாடல்களாகும். பிள்ளைத்தமிழ், குறவஞ்சி, பள்ளு முதலிய பிரபந்தங்களும் வசந்தன் கவிகள், சிந்து வகைகள் முதலியன புலவரால் இயற்றப்பட்டுப் பொது மக்களிடையே பரவியவை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இயற்றப் பெற்ற நாடகங்கள் யாவும் (மனோன்மணீயம் நீங்கலாக) இவ்வகையைச் சேர்ந்தவை.

ஏற்றத்திலிருந்து வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சும் போது பாடப் பாடுகின்ற பாட்டு ஏற்றப் பாட்டு எனப்படும். ஏற்றத்திலிருந்து நீர் இறைப்போர் தப்பித் தவறிக் கீழே விழுந்து விட்டால் உயிர் பிழைத்தல் அரிது 'எமன் ஒருவனைக் கொல்வான். ஏற்றம் மூவரைக் கொல்லும்' என்பது பழமொழி.

'முப்பதுடன் எடுத்து மூங்கில் இலைமேலே' என்று ஏற்றம் இறைத்தவன் பாடி இடையில் நிறுத்தி விட்டுச் சென்றான் என்றும், கற்பனையில் சிறந்து கவிச் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்த கம்பராலேயே நெடுநேரம் சிந்தித்தும் அதன் அடுத்த அடியைக் கற்பனை செய்ய முடியவில்லை என்றும் பிறகு ஏற்றம் இறைத்தவன் மீண்டும் வந்து 'மூங்கில் இலைமேலே தூங்கும் பனி நீரே,' தூங்கும் பனி நீரை வாங்கும் கதிரோனே' என்று தொடர்ந்து பாடிக்கொண்டே ஏற்றம் இறைத்தான் என்றும் செவி வழிச் செய்தியாக நாம் அறிகிறோம். ஏற்றப்பாட்டின் ஏற்றத்தை அறிந்து வியந்த கம்பர் 'ஏற்றப்பாட்டுக்கு எதிர்ப் பாட்டு இல்லை' என்று கூறியதாக மரபு. கம்பர் வாக்கே பழமொழியாகி விட்டது. சிற்சில சமயங்களில் பாமர மக்களின் கற்பனை வளம் பெருங்கவிஞரின் கற்பனைத் திறனையும் வென்று விடுகின்றது என்பதற்கு இங்குக் குறிப்பிட்ட ஏற்றப் பாட்டு ஒன்றே சான்று பகர்ந்த வண்ணம் இருக்கின்றது. இதோ மற்றொரு ஏற்றப்பாடல்.—

எட்டடி அளந்து வெட்டினான் துரவே
  பத்தடி அளந்து பாய்ச்சினான் துலாத்தை
அஞ்சடி அளந்து அமர்த்தினான் மடலே
  எட்டடி கோலு எடக்கு நாட்டு மூங்கில்
பத்தடிக்கோலு பவளக்காட்டு மூங்கில்
  அஞ்சடிக்கோலு அழகுநாட்டு மூங்கில்
எட்டடிக்கோலும் விட்டாடுமோ பானை
  பத்தடிக் கோலும் பண்ணுடுமோ ஏற்றம்
ஏற்றங்களைப் பார்த்தால் ஏமன் செடலாட்டம்
  ஓடி நிலம்பாய ஒருவதியால் ஒன்று.

தண்ணீர் இறைத்துச் சாய்த்த சாலின் எண்ணிக்கை அதில் பொருந்துமாறு அமைந்த பாட்டு ஏற்றப் பாட்டு அரிச்சந்திரன் ஏற்றப்பாட்டு, இராமாயண ஏற்றப் பாட்டு, விராட பருவ ஏற்றப் பாட்டு முதலியவை ஏற்றப் பாட்டு வகையைச் சேர்ந்தவை 'என்னைப் பணிந்தோரை நான் பணியலாச்சே. மறையவருக்கடிமை மகனே விலைப்பட்டோம்' என்பது அரிச்சந்திரன் ஏற்றப் பாட்டின் நடை. எளிய பாடல்வாயிலாக உயர்ந்த கருத்துக்களை எல்லோர்க்கும் புகட்ட விரும்பிய சித்தர்கள் உழவனின் வாழ்க்கையோடியைந்த ஏற்றப் பாட்டின் இனிய சந்தத்தைத் தம் பாடலுக்குப் பயன் படுத்தினர். இவ்வகையில் இராமயோகி தந்த இராசயோகி ஞான ஏற்றம் என்னும் ஏற்றப் பாட்டு குறிப்பிடத்தக்கது.

வயல் வரப்புக்களில் பெண்கள் உட்கார்ந்து கொண்டு பாடும் விருந்திற் பாணி, உழவர்கள் இறை கூடையைப் பயன் படுத்தி நீர் இறைக்கும் போது பாடுகின்ற இறைவைப் பாட்டு, பொன்னேர் (நல்லேர்) பூட்டி உழுபவர் பாடுகின்ற ஏர்மங்கலம், நெற்களத்தில் சூடடிக்கும்போது பாடுகின்ற பொலிப் பாட்டு, நெல்லை அளக்கும் பொழுது பாடுகின்ற முகவைப் பாட்டு, உழத்தியர் பாடுகின்ற உழத்திப் பாட்டு (பள்ளுப் பாட்டு) நாற்று நடும் போது பாடுகின்ற நடவுப் பாட்டு, கதிரை அறுவடை செய்யும் போது பாடுகின்ற அறுவடைப் பாட்டு முதலிய யாவும் மருத நிலத்தில் தோன்றிய உழவுப் பாடல்களாகும்.

ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பு இருக்காது என்பது அனைவரும் அறிந்த பேருண்மை. நாற்று நடும் மகளிர் மகிழ்ச்சியுடன் பாடிக்கொண்டே பணி புரிவதை நாம் இன்றும் நாட்டுப் புறங்களில் காணலாம்.

இதோ ஒரு நடவுப் பாட்டு.

மாலை எருதுபூட்டி வயலை உழுதானும் — அண்ணன்
வயலை உழுதானும்
வாழைச் சம்பா நாத்தெடுத்து வகையா நடுங்கோடி
காரி எருதுபூட்டி கழனி உழுதானும் — அண்ணன்
கழனி உழுதானும்
கருங்குறுவை நாத்தெடுத்து கலந்து நடுங்கோடி

இப்பாட்டில் உழவையும் நடவையும் சேர்த்துப் பாடப்படுவதைக் காணலாம.

இந்திரனை நோக்கி எடுத்தேன் திருஅலகு
சந்திரனை நோக்கி எடுத்தேன் திருஅலகு
நிறுத்தின திருஅலரு நின்று பயிர் ஏறவேணும்
நெல்லா விளையவேணும் நெடுங்களங்கள் ஏற வேணும்
கதிரா விளைய வேணும் எங்களையா — களஞ்சியங்கள்
ஏறவேணும்

காசாப் படியளந்தா — கனத்த நேரம் செல்லுமின்னு
நெல்லாப் படியளந்தா — நீண்ட நேரம் செல்லுமின்னு
அரிசியாப் படியளந்தா — ஆக்க நேரம் செல்லுமின்னு
சோறாப் படியளக்கும் — எங்களையா சுவாமியார் பண்ணையிது

[அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பது அனைவரும் நன்கறிந்த உண்மையன்றோ?]

அந்த அரிவாள் இந்த அரிவாள் — ஏலேலக் குயிலே லல்லோ
உருக்கி வைச்ச கருக்கரிவாள் — ஏலேலக் குயிலே லல்லோ
சாயம் நல்ல பிரி அரிவாள் — ஏலேலக் குயிலே லல்லோ
சாயுதம்மா நெல்லும் புல்லும் — ஏலேலக் குயிலே லல்லோ
நெல்லும் புல்லும் அறுத்தறுத்த — ஏலேலக் குயிலே லல்லோ
நேரான கட்டு கட்டி — ஏலேலக் குயிலே லல்லோ
கட்டு கட்டித் தூக்கையிலே — ஏலேலக் குயிலே லல்லோ
கணக்கிட்டான் காட்டுக்காரன் — ஏலேலக் குயிலே லல்லோ

என்பது செவிக்கும் சிந்தைக்கும் இனிய ஓர் அறுவடைப் பாட்டாகும். மருத நிலத்தில் இசைக்கப்படும் நாட்டுப் பாடல்களைத் தொடுத்துரைக்கின்றார் மாங்குடி மருதனார்.

அள்ளல் தங்கிய பகடுறு விழுமம்
கள்ளார் களமர் பெயர்க்கும் ஆர்ப்பே
ஒலிந்த பகன்றை விளைந்த கழனி
வன்கை வினைஞர் அரிபறை இன்குரல்
தளிமழை பொழியும் தண்பரங் குன்றில்
கலிகொள் சும்மை, ஒலிகொள் ஆயம்
ததைந்த கோதை தாரொடு பொலியப்
புணர்ந்துடன் ஆடும் இசையே அனைத்தும்
அகலிரு வானத்து இமிழ்ந் தினிது இசைப்ப
குருகு நரல மனை மரத்தான்
மீன்சீவும் பான் சேரியொடு
மருதம் சான்ற தண்பணை

— (மதுரைக்காஞ்சி. 259 — 270)

உழவர் வாழ்க்கையை இனிது விளக்குகின்றது முக்கூடற் பள்ளு. இது ஏட்டிலக்கிய வடிவில் இருந்தாலும் வாய்மொழி இலக்கியத்தின் உயிர்த் துடிப்பைப் பல பாடல்களில் காணலாம்.

ஆற்று வெள்ளம் நாளைவரத்
தோற்றுதே குறி — மலை
யாள மின்னல் ஈழமின்னல்
சூழ மின்னுது
நேற்றும் இன்றும் கொம்பு சுற்றிக்
காற்ற டிக்குதே — கேணி
நீர்ப்படு சொறித்தவளை
கூப்பிடுகிதே
(பள்ளுப் பாட்டு — முக்கூடற்பள்ளு)

மேற்குறிப்பிட்ட பள்ளுப் பாட்டு நாட்டுப் பாடல் போல் அமைந் திருப்பதை நன்ருக அறியலாம்.

ஆங்கிலக் கவிஞர் வில்லியம் வேர்ட்ஸ்வொர்த் தாம் இயற் றிய தனி அறுவடைக்காரி (solitary Reaper) என்னும் கவிதை யில் நாட்டுப் புறப்பெண் ஒருத்தி நாடோடிப் பாடல் மிக இனி மையாகப் பாடிக்கொண்டே அறுவடை செய்வதைக் குறிப்பிட் டுள்ளார். அவள் பாடிய பாட்டின் கருத்து கவிஞர்க்குப் புரியா ததால் அவர் கீழ்க் கண்டவாறு ஊகிக்கின்ருர்.

இப் பெண்ணின் பாடலுக்கு உரை சொல்வோர் இங்குளரோ
கடந்து சென்ற நெடுநாளின் துயரத்தைப் போர்களை
இப் பெண்தான் சொன்னளோ அல்லது நாள் தோறும்
வந்துதிக்கும் துயரத்தைச் சொற்களினல் சொன்னளோ?
தோன்றித்தோன்றி செல்கின்ற உற்பாதம் அனைத்தையும்
வந்த வகை சொன்னளோ வருவதைத்தான் சொன்னளோ?

'Alone she cuts and binds the grain
And sings a melancholy strain'
'Will no one tell me what she sings?
Perhaps the plaintive numbers flow
For old, unhappy, far-off things.
And battles long ago.' — Solitary Reaper
— William Wordsworth

தமிழகத்தில் வழங்குகின்ற அறுவடைப் பாட்டும் வில்லியம் வேர்ட்ஸ்வொர்த் இயற்றியுள்ள மேற்குறிப்பிட்டுள்ள கவிதையும் ஒப்பு நோக்கத்தக்கது. சிலப்பதிகாரத்திலுள்ள ஏர் மங்கலம், முகவைப் பாட்டு ஆகிய பாக்களைப் பற்றிய குறிப்புக்களும் அவற்றிற்கு அடியார்க்கு நல்லார் வரைந்த உரையும் உழவுத் தொழிலைப் புகழ்ந்து பாடும் பழைய மரபை மெய்ப்பிக்கின்றன.

ஏரோடு நின்றோர் ஏர்மங் கலமும்
அரிந்துகால் குவித்தோர் அரிகடா வுறுத்த
பெருஞ்செய்ந் நெல்லின் முகவைப் பாட்டும்.

(சிலப்பதிகாரம் — 10 — 135 — 137)

இப்பாடல்கள் யாவும் மருத நிலத்து மக்கள் வாழ்க்கையை இனிது எடுத்து இயம்புகின்றன.

உழவுத் தொழில் நன்கு நடைபெறவும் மக்கள் வளத்துடன் வாழவும் மழை வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும். மாரியல்லது காரியம் இல்லை என்பது பழமொழி. மழை பெய்யாவிட்டால் மழைக்குரிய இறைவனாகிய வருணனை வேண்டிக் கொள்வது தொன்றுதொட்டு வருகின்ற மரபு. வருணனை விளித்து மழை வேண்டும் என்று உருக்கத்தோடு வேண்டிப் பாடுகின்ற பாடல்கள் பல உண்டு. சில பாடல்களை மட்டும் இங்குக் காணலாம்.

காலம் தெளிய வேணும் காரி மழை பெய்ய வேணும்
ஊரு தெளிய வேணும் உத்த மழை பெய்ய வேணும்
கோடை மழை பெய்ய வேணும் குடிமக்கள்வாழ வேணும்
வானமழை ராசாவே வான மகாதேவா
வான மகா தேவா மழையாய்ப் பொழிய வேணும்
கலப்பை பிடிக்கும் தம்பி கைசோர்ந்து நிற்கிறாங்க
அதுக்கு மனமிரங்கி ஐயோ வருண தேவா
ஏர்பிடிக்குந் தம்பியெல்லாம் எண்ணப் பட்டு நிற்கிறாங்க
அதுக்கே இரங்க வேணும் ஐயோ வருண தேவா.

எப்போமழை பெய்யும் குப்பம் பயிரேறும்
குப்பம் பயிரேறும் குடிகள் வந்து சேரும்
கற்பூரம் விளையும் காலமழை பெய்யும்
சொன்னது விளையும் சோதிமழை பெய்யும்

வெற்றிலே விளையும் வேணமழை பெய்யும்
வேணமழை பெய்யும் விடியல் பூசலாடும்
சொன்னது விளையும் சொர்ண பூசையாகும்
தொழுதேன் பகவானே தொண்ணூற்றுடன் ஒன்று.

பஞ்சம் பறந்தோட, வறட்சி விலக. ஊரும் நாடும் குளிரப் பெருமழை பெய்கின்றது. பெருமழை நாட்டைக் குளிர்வித்தது போல் மக்கள் உள்ளத்தையும் இன்பத்தில் ஆழ்த்திக் குளிர் விக்கின்றது. உள்ளம் இன்பத்தில் மூழ்கிக் குளிர்ந்த போது மகிழ்ச்சிப் பெருக்கோடு பாடப் பெற்றப் பாடல்கள் பல. அவற்றுள் இதோ ஒன்று.

பேயுதையா பேயுது பேய்மழையும் பேயுது
ஊசிப் போலக் காலிறங்கி உலகமெங்கும் பேயுது
துட்டுப் போல மின்னிச் சீமை யெங்கும் பேயுது
சீமையெங்கும் பேஞ்ச மழை செல்ல மழை பேயுது.

தினைப்புனத்திலுள்ள கதிர்களை உண்ணக் கிளி, குருவி முதலிய பறவைகள் தினைப்புனத்திற்கு ஆர்வத்துடன் பறந்து வரும். எல்லா உயிர்கள் மாட்டும் அருள்கொண்ட பண்டைத் தமிழ் மக்கள் அவற்றைக் கல்லெறிந்து கொடுமைப் படுத்தி விரட்டினர் அல்லர். தினைப்புனம் காக்கும் குறக்குல மகளிர் பாட்டுப் பாடிக் கொண்டும், கிளிகடி ஒப்பும் கருவியால் ஒலி எழுப்பியும் ஒலியால் விரட்டினர். தினைப்புனத்திலுள்ள பரண் மீது இருந்து பறவைகளை ஓட்டப் பாடப்படும் 'ஆயோ' என்னும் பாடல் ஆலோலம் எனப்படும். ஆலோலப் பாட்டுப் பாடித் தினைப்புனத்திலுள்ள கிளியை ஓட்டிய செய்தியைக் கபிலர் தாம் யாத்த குறிஞ்சிப் பாட்டில் குறிப்பிடுகின்றார்.

புள்ளார் இயத்த விலங்கும லைச்சிலம்பின்
வள்ளுயிர்த் தெள்விளி இடையிடைப் பயிற்றிக்
கிள்ளை ஒப்பியும்

(குறிஞ்சிப் பாட்டு — 99 — 101)

பெருங்கௌசிகனார், ஆலோலப் பாட்டொலியைக் 'கிளி கடி மகளிர் விளிபடு பூசல்' (மலைபடுகடாம் — 329) என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

(தொடரும்)

கம்பரின் நகைச்சுவை

திரு. K. சோமசுந்தரம், B. A., B. L., தஞ்சை.

மக்களது அறிவு மேம்பாட்டால் அகத்தே தோன்றும் இன்ப உணர்வு ஆனந்தமாகப் பொங்கி யெழும்போது உண்டாவது நகையாகும். இன்பத்தின் புலப்பாடு நகையாதலான், நகையின் பயன் உவகையாக விளங்கும். ஆசிரியர் தொல்காப்பியர், மெய்ப்பாட்டியலில்,

> 'நகையே யழுகை யிளிவரன் மருட்கை
> யச்சம் பெருமிதம் வெகுளி யுவகை யென்
> றப்பா, லெட்டே மெய்ப்பாடென்ப'

என்றதில் நகையினை மூதற்கண் கூறி, அதற்கியைபுடைய உவகையை கடையிற் எடுத்தோதி, நகையில் உவகையும், உள்ளத்து உவகையில் நகையும் இரண்டறக் கலந்து மிளிரும் வகையின் முறையினை நிறுத்திக் காட்டுவதிலிருந்து. உலக வாழ்விற்கு உவகையும் நகையும் இன்றியமையாததென்பது அறிதல் வேண்டும்.

நகையே வாழ்விற்குச் சுவையூட்டி, மண்ணுலகை விண்ணுலகமாக்கும். நகையின்றேல் உள்ளக் குறிப்பினைப் புலப்படுத்தும் விறலும், குறிப்பறிதலும் இலவாகும் அதனுன் உலகியல் வாழ்வு மில்லையாகும்: உள்ளம் பூரித்தலும், உடல் வனப்பும் வளனுமுறுதலும் இலதாகும்: இன்பத்தை விழைதலும் துய்த்தலும் அரிது பொதுவாக நகையிலதேல் அணிமணியும் அழகும் சிறவாது. நகையின் விழுச் சிறப்பினைக் கண்ட விழுத்தவ முதல்வராய நற்றமிழ் கீரர், அறுமாமுகமுடைய முருகக்கடவுள் வள்ளிக்கு ஒருமுக நகையை அளித்ததை 'வள்ளியொடு நகையமர்ந்தன்றே ஒரு முகம்' என வீருப்புடன் நயம்பட உரைத்து நகையின் அருமைப் பாட்டினையும், பெருமையினையும் தோன்ற வைத்தது கண்டு நகைத்து மகிழற்பால தொன்றாகும் நகை நான்கனடி வகையாக பிறத்தலே "எள்ளல், இளமை, பேதைமை, மடனென்றுள்ளப்பட்ட நகை நான்கென்ப' என்பது தொல்காப்பியத்தால் நன்கு புலனுவது. மனத்தின் கண் பதிக்கற்பாற்று.

நகை தோன்றும் வகையை வனப்பு நிறைந்த சாதனையாக ஆக்கிக் கலை மணங் கமழக் கையாண்டு, அதன் வழி அழகிய பொருளால் அடையப் பெறும் ஆனந்தத்திலிருந்து உண்டாகும் கவின் கலையை வாழ்க்கையின் பயன் கலையாக மாற்றி, வெற்றி கண்ட பெருமை கல்வியற் பெரிய நல்லியற் கவிஞராய கம்பருக்கு உரியதாகும். கம்பர் நலம் தரும் சொல்லாலே, நகைச் சுவையினை யூட்டும் இனிய காவியக் கதையை உயர் நிலைக்குக் கொணர்ந்தார். நகைச் சுவைக்கே கம்பர் கவியணி செய்தார். நகைச் சுவையின் பயனை அறிய வேண்டின், கம்பரின் அனுபவத்தின் கனியாக விளங்கும் காவியத்தைச் செவ்விய நேர்மைச் சிறப்போடு நன்கு பயிலல் வேண்டும் கம்பர் உணர்ச்சி ததும்ப விளங்க வேண்டியவையாவையும், நகைச்சுவை குலுங்க, வளமார்ந்த தகுதியோடு நயமுற, தரமும் திறமும் கருதி உரைத்துள்ளார். இவரது நகை, சீர்மை குன்றிப் போகும் சாரமற்ற நையாண்டியன்று; ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டும் அனுபவத்தில் ததும்பி மலர்ந்தது; சந்தி சிரிக்கும் கேலிக் கோமாளித்தனச் சாயலை யுடையதன்று; வீரக்கனலோடு கூடிய கோமளம் பொருந்தி மனத் தாபத்தை மகிழ்விக்கும் அருளுடையது: வாழ்க்கைத் துன்பத் துயரில் வெந்து நொந்தார்க்கு கிளர்ச்சிபட ஆறுதலளிக்கும் வளமுடைய நல்லியல்பு வாய்ந்தது. உவப்பினையும் உவர்ப்பினையும் அறிவுக்குத் தகுந்த முறையில் ஏற்புடைய இயல்போடு உணர்த்தி, விழிப்பூட்டும் வன்மையும் தன்மையுமுடையது. கம்பரது நகையும் உவகையும், மனத்தின் அலந்தலையினையும், அலவுதலையும் அகற்றி, துன்பத்திற் கேதுவாகியவற்றைத் துடைத்து, ஆங்கே. ஆக்கம். பொலிவு நன்மை முதலாயவற்றை அளிக்கும் அறிவினையும் வீறினையும் விளங்கச் செய்யும் பெற்றியினையுடையன.

கம்பர் கையாண்ட நகைச்சுவை பொறுப்பற்றதாய் அருவருப்பும், கேவலமும் கீழான தன்மையினையும் தரத்தக்கவல்ல அமைப்பில் படிந்ததல்ல. படிக்குந்தோறும் கம்பரது இதயத்தில் உள்ள நகைச் சுவையாவும், தம் தம் இயலழகைக் காட்டி நம் நாவிற்கு வந்து, உள்ளுணர்வை உருகவைத்து உருவாக்கும் தகைமையால் திகழும் உள்ளக் கிளர்ச்சியையும் இன்பத்தையும் நல்கும் நலமுடையது. இத்தகைய சுவை, கம்பரது இனிமைசான்ற காவிய நாடகத்தில், தெளிவு கொண்டு மறைந்து கிடக்கும் மாணிக்கப் புதையல் போன்றமைந்து, கண்ணினுஞ் செவியினும் நுண்ணிதின் நாடி உணர்வோர்க்கே நன்கு புலனாகும். ஆனல் அத்தகையது உணர்ந்து பெரிதும் அனுபவிக்கற்பாலது. பேராசிரியர் மெய்ப்பாட்டியல் முதற் சூத்திரத்து

உரையின்கண் நகைச் சுவைக்கு உரியன 'ஆரியர் கூறும் தமிழும், குருடரும் முடவருஞ் செல்லுஞ் செலவும். பித்தருங்களியரும் சுற்றத்தாரை யிகழ்ந்தாரும் பேசும் பேச்சும் குழவி கூறும் மழலையும் போல்வன' என்றது ஈண்டு உற்றறிந்து இன்புறற்பாலது. கம்பரின், நகைச்சுவைக்குப் பெரும்பாலும் பொருளாவன, உருவத்திலும், சொல்லிலும் செயலிலும். நிகழ்ச்சிநிரலிலும், சுற்றுபுறச் சூழலிலும் நின்றும் தோன்றுபவன. மற்றும் இவை உள்ளுறையும் இறைச்சியும் இன்ன பிறவுமாய் மிளிர்வன கற்பனை உதவிகொண்டு காணின் பல உவகைத்துணுக்குகளும். சிருங்காரத்தோடும் புதுமையோடும் தெளிவோடும் விரிந்து கலந்து உள்ளப்பட்ட நகையாகவும் உள்ளப்படாத நகையாகவும் வருவது புலனாகும். அவையாவும் பெரும்பாலும் முறுவலித்து அகத்தே நகுதலையும், புறத்தே பெருக நகுதலையும் உண்டாகும் தகைமையுடையன; இதயத்தில் அதிசயமாக ஒலித்து மக்களை உயர்வோடும் உணர்வோடும் முன்னேற்றத்திற்கு கொண்டு வந்து உவகைத் தத்துவத்தின் வரம்பிலாத் தன்மையினைப் புலனாக்கும் சீர்மையினை யுடையன. கூர்ந்து சிந்திக்கின் உலகிடை வாழவரும் இரக்கத்தின் அன்பினை ஒழிக்கவரும் ஆணவத்தின் ஆரவாரத்தினையும் வீரத்தின் செருக்கினையும் எள்ளி நகையாடுவதை உட்கோளாகக் கொண்டுள்ளது கம்பரது இராம காவிய மென்க.

கம்பர் தாடகையின் நுடங்கிய இடையின் சிறுமையை

'கடங்கலுழ் தடங்களிலு கையொடு கைதெற்று
வடங்கொள் நுடங்குமிடையாள்'

எனக் கூறுவதை கற்பனைக் கண்கள் கொண்டு காணின் நவையற்ற நகை தானே தோன்றுதல் இயல்பு. ஈண்டு இரு பெரிய களிறுகள் தங்கள் துதிக்கைகளை இணைத்து கயிறுபோல் வளைத்துக் கொண்டாலும் வளைப்பதற்கு இயலாத அத்தகைய நுடங்குமிடையாள் எனக் கம்பர் கூறியது நகைத்தற்குரியது. நகையின் மூலம் உடலமைப்பின் உருவததிலும், பண்பிலும் தாடகைக்குப் பெண்மையின் மையினை நம் கண்முன் கம்பர் தோன்றச் செய்து விடுகிறார்.

'வார்குலா முலை வைத்த கண் வாங்கிடப்
பேர்கிலாது பிறங்கு முகத்தினன்
தேர்கிலா னெறி அந்தரில் சென்றொரு
மூரி மாமத யானையை முட்டினன்'

என்றதில் கட்டிளமைப் பருவத்தொருவன் இளமகளிரின் மார்புக் கச்சினைக் கண்டபடியே, குருடரைப் போல் நடந்து சென்று மதயானையின் மீது மோதிக்கொண்டதைக் கம்பர். இளமை காரணமாகப் பிறந்த நகையின் மூலம் நமது விலாவைப் புடைக்க வைத்துத் தெளிவித்தும், நகைக்கும் இளமைக்குமுள்ள தொடர்பையும் காண வைத்துள்ளார். மற்றும்,

'குடையர் குண்டிகை தூக்கினர் குந்திய
நடையர் நாசி புதைத்தகை நாற்றவர்
கடகளிற் றையும் காரி கையாரையும்
அடைய அஞ்சிய அந்தணர் முந்தினர்'

என்ற பாட்டின்கண். அந்தணர், குடையும் குண்டிகையும் ஒரு கரத்தில் கொண்டு, மற்றொரு கரத்தினை மூக்கினைவிட்டு எடுக்காது, களிற்றினையும் காரிகையையும் பயந்து நடுங்கியும் ஒதுங்கியும் குந்திக் குந்தி மறுகிச் செல்லும் செலவு நகையளிப்பதாகும்.

காவிய நடையை நடத்திச் செல்ல, கம்பர் நகையில் விளையும் கும்மாளியும் எக்காளமும், நம செவிக் கண்ணே எக்காலமும் ஒலிக்கும்படிச் செய்துவிடுகிறார். கம்பர் நகைச் சுவையை, மனதிற்கு ஊட்டந்தரும் உய்வுறையாகக் கருதி, உயிர் வாழ்க்கையை நலமும் பயனுமுடையதாக ஆக்க வகை செய்துள்ளார். மற்றும் நகைச் சுவையில் ஆற்றல், வீறு. வளம் தெளிவு இனிமை முதலியன எழிலுற விளங்க அமைத்தும் விடுகிறார். இராவணனை இகழ்ந்து கும்பகருணன் கடிகின்ற பாட்டின்கண்,

'நன்னகரழிந்ததென நாணினை நயத்தால்
உன்னுயிரெனத் தகைய தேவியர் களுன்மேல்
ஒண்ணகை தரத்தர வொருத்தன் மனையுற்றாள்
பொன்னடி தொழத் தொழமறுத்தல் புகழ்போலாம்'

இராவணன் தேவிமார், அவன் பிறன்மனையாள் காலில் விழுந்து தொழுதலைக் குறித்து எள்ளி நகையாடல் எவ்வளவு அடக்க ஒடுக்கமாகவும் நன்கு வெளிப்பட்டுத் துலங்கா நிற்பதனை, உள்ளுந்தோறும் இனிமையும் இறும்பூதும், தெளிவும் ஆராமையும் பயந்து திகழ்தல் ஒருதலை. இப்பாட்டினிலே கம்பரின் கம்பீரமாய சொற்கள் நகைச்சுவை கொண்டு தேவிமார்களது உதடுகளில் மலர்ந்து தவழ்ந்து சலசலப்புடன் விளையாடி காமத்தின் வெறுமையையும் சிறுமையையும் சித்திரித்து, ஓரோ வழி நகையின்ப மூட்டிச் செல்லும் பான்மை உணரப்படும்.

இராமன்பால் உள்ளம் உவப்ப அன்பு பூண்ட குகனைக் கம்பர் உருவாக்கும் பொழுது, அவனது வஞ்சகமற்ற மனப் பான்மையிலும் உரையிலும் மென்மையாய நகையினைத் தோன்ற வைத்தது புகழ்ந்து நக்கதாகும்.

தோலுள துகில்போலும் சுவையுள தொடர் மஞ்சம்
போலுள பரண்வைகும் புரையுள களிவாணின்
கானுள சிலைபூணும் கையுள கடிதோடும்
மேலுள பொருளேனும் விரைவொடு கொணர்வேமால்

என்றதில் குகன் கூறும் சொற்கள் யாவும் எள்ளல் காரண மாக எழுந்ததல்ல வென்பது நுனித் துணர்வார்க்கு வெள்ளி டைமலை. அதனைக் கேட்கும் நமக்கு அவை அறியாமை காரண மாக எழுந்த நகையினையும் கனிந்த அன்பொடு கலந்த உவ கையினையும் விளங்க வைக்கும் பான்மையன. இத்தகைய நகைச் சுவையில் பயன் கருதாது விழுமிய அன்புகொண்ட குகனது பெருமையையும், அகங்குழைந்து உருகும் அன்பர் நிலையினையும் கம்பர் சுட்டிக் காட்டியது ஊகித்து அறிதற்பாலதே.

கம்பரது நகைச் சுவை, ஏக்கம் சோர்வு முதலாய பண்பு கள் ஏற்படா வண்ணம், உள்ளத்து உணர்வுக்கு இன்பம் ஊட்டவல்லது வெறும் நகை வெடியினைமட்டும் கம்பர் விலாப் புடைக்க வேடிக்கையாக விளைவிப்பவரல்லர் நகைச் சுவை வழி மக்கள் கைக்கொள்ளவேண்டிய மேலாய உண்மை முறைகளைக் கம்பர் அழுத்தம் திருத்தமாக அறியவைத்து அவ்வுண்மைக்குத் தனி அழகுடன் வலுவும் ஒளியினையுமூட்டி அதனை அனுபவிப் பதற்காய வகையையும் உண்டாக்கி விடுகிறார்: நகை தத்து வத்தின் செயலையும் மிக எளிமையுடன் விளங்கும்படியும் செய்து விடுகிறார். நகையின் காரணமாக, கம்பர் தம் காவிய மாந்தர் களின் உயர்வையும் தாழ்வையும் இடத்திற்கும் தன்மைக்கும் தக, சிறுமைக்கு இடங்கொடாமல், சித்தரித்துக் காட்டி, குணம் செயல் முதலியவற்றைப் புலப்படுத்தும் பெயரைக் கொண்டு நகைத் தெளிவுடன் அன்னாரை அழைத்து அக மகிழ்வார். நகைச் சுவையினை கதைப் போக்கோடு அளவுடன் இழைத் துக் கூட்டி. எளிதில் புலப்படாத முறையிலும், புலப்படும் முறை யிலும் நகைச் சுவையின் எழிலையும் வளத்தையும் காட்டி, கம் பர் காவிய மாந்தர்களின் மன வளர்ச்சியினை செஞ் சொற் களின் வழி தேக்கிவைத்து மிக்கதோர் உவகையை விளைவித்து விடுகிறார்; இதயத் துடிப்பையும் ஆனந்தத்தையும் பெருக்கி விடுகிறார். இதனாற்றான் கம்பரது நகைச் சுவைத் தேன், அழகு

PAGE NO-225 TO 228 MISSING IN ORIGINAL

முடித்தார்கள். சங்கப் பொருளாளர் அவர்கள் நன்றி கூறினார்கள். அன்று மழை வந்துவிட்டதால் இராதாகிருட்டின இளையோர் பள்ளி மாணவியர் குழந்தைகள் இல்லச் சிறுவர் ஆகிய இருவர்களுடைய கலை நிகழ்ச்சிகள் மட்டும் கவினுற நடத்தப் பட்டன. விழாவுக்கு ஏற்பாடு செய்த நாடகங்கள் மறுநாள் நடிக்கப் பெற்றன. "மன்னனின் மாண்பு" என்னும் நாடகம் கரந்தைப் புலவர் கல்லூரி மாணவராலும், "தளவாய் அரிய நாதர்" என்னும் நாடகம் உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி மாணவராலும் செம்மையாக நடிக்கப்பெற்றன.

நறுந்துணர் — மதிப்புரை.

திரு. தரங்கை — பன்னீர்ச்செல்வன் அவர்கள் எழுதிய நறுந்துணர் என்னும் பாடல்நூல், பைந்தமிழ்ச் சிறார்க்கு மொழி இலக்கிய நாட்டுப் பற்றுக்களை ஊட்ட எழுந்ததாயினும் பொதுவாக யாவர்க்கும் பயன்படும் முறையிலும் அமைந்துள்ளது.

இவ் ஆசிரியர் மொழிநூற் பெரும் புலவர் திரு பாவாணர் பாலும் அவர் வழிநிகழும் தனித்தமிழியக்கத்தின்பாலும் ஆழ்ந்த பற்றுடையவராய் விளங்குதலை இவர்பாடல்களுள் காணப்பெறும் குமுகாயம், காங்கை, சுறவம், இளவிடை, பாழி, வாகு, கணியம் திறைப்பு, அணிகம், ஊற்றுத் தூவல், பகடி முதலிய சொற்களால் அறியலாம் தனித்தமிழ்ச் சொற்களைக் கையாளவேண்டும் என்னும் விருப்பினல் பாடல்கள் இடை யிடையே சிறிது கடுமையாகக் காணப்படினும் இவருடைய தமிழ்ப்பற்று போற்றத் தக்கது - எளிய இனிய மெட்டுகளில் பாடல்கள் அமைக்கவேண்டிச் சிறிது யாப்புநலம் புறக்கணிக்கப் பட்டுள்ளதுபோலும் இடை யிடையே சில குறைபாடுகளிருப்பினும்

'உள்ளம் ஊன்றிப் படியுங்கள் பண்போடு
ஓங்குந் தமிழ்ப்பால் குடியுங்கள்"
'வதியும் தடைகள் நீக்கு
வறட்டுப் பெருமை போக்கு " என்றாற்போன்ற

அறிவுரைகளும் - மைந்தனைப் பாடுங்கடி என்னும் பாடலில்

'சின்னக் கருவிழி வண்டனடி — புகழ்ச்
சிந்திடும் நாட்டின் தொண்டனடி,'
'செம்மை இலந்தைமெய் வண்ணனடி கனிச்
செவ்விதழ் மெல்லொலிப் பண்ணனடி

என்றாற் போன்ற உவமையும் கற்பனையும் செய்யுளின்பத்தை ஊட்டுகின்றன. தனித்தமிழ்ப் பற்றுளர்க்கும் வண்ணப் பாடல்களைச் சுவைப்போருக்கும் இந்நூல் இன்பம் பயக்கும்— விலை 0—60 காசுகள் கயற்கண்ணி பதிப்பகம் — முதனை —தென்னார்க்காடு மாவட்டம் ★

தமிழ் மொழி வளர்ச்சியில் ஒரு கூறு.

பொதுமக்கள் பயன்படுத்தும் பிறமொழிச் சொற்கள் மேலும் சிலவற்றிற்குத் தூய தமிழ்ச் சொற்கள் இவ்விதழில் வெளியிடப் பெறுகின்றன. வழக்கம் போல் அன்பர்கள் தக்க திருத்தங்களை எழுதியனுப்ப வேண்டுகிறோம்.

சாதகம்	—	பிறப்பாடு, பிறந்தநாட் குறிப்பு
சோதிடம்	—	ஒளிநூல், கோள்நூல்
பிராணன்	—	உயிர்
ஆலிடே	—	விடுமுறை
லீவு	—	விடுப்பு
விக்கிரகம்	—	படிவம்
பெட்டிஷன்	—	குறையீடு
சாதாரணம்	—	இயல்பு, எளிது
கௌரவம்	—	மதிப்பு
ரகசியம்	—	மந்தணம், மறைப்பு
ரைஸ்மில்	—	அரிசி ஆலை
சினிமா	—	திரைப்படம்
டாக்கீசு	—	பேசும்பட அரங்கு
காகிதம், கடுதாசி	—	தாள், இதழ், மடல்
டாக்டர்	—	மருத்துவர்
ஹோட்டல்	—	உணவு விடுதி, உணவகம்
கான்டீன்	—	சிற்றுண்டிச் சாலை (பணிமனைகளைச் சார்ந்திருப்பவை)
ஹாஸ்டல்	—	மாணவர் இல்லம். தங்கும் விடுதி
லாட்ஜு	—	தங்குமிடம், விடுதி
கூலிங் கிளாசு	—	குளிர்ச்சிக் கண்ணுடி
பரஸ்பரம்	—	இருபால்
லஞ்சம்	—	கையூட்டு
ஜோடி	—	இணை
ஏஜண்ட்	—	முகவர்